# லூர்து திருத்தல தமிழ் ஆன்மீக மையம்
# வழங்கும்
# லூர்து அன்னை திருக்காட்சிகள்:
# என்றும் வாழும் நற்செய்தி

**(இந்தக் குறுந்தகடானது லூர்து அன்னை திருத்தலத்தின் பரிந்துரையாலும், அத்திருத்தல அதிபர் தந்தையின் வேண்டுகோளின் அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டது)**

பிரனே மலையடிவாரத்தில் அமைந்திருந்த ஒரு சிறிய கிராமம் பின்னாளில் உலகப் புகழ்பெற்ற லூர்து நகராக மாறும் என்று எவரும் கற்பனை கூட செய்திருக்கமாட்டார்கள்.

லூர்து நகரின் வரலாற்றுப் பின்னனி மிகவும் சுவாரஸ்யமானது.

## லூர்து அன்னையின் அற்புதக் கெபி

பிரனே மலை அடிவாரத்தின் ஒரு பகுதியில் ஒருவர் மட்டுமே ஒதுங்கக் கூடிய குகை போன்ற ஒரு சிறிய பகுதியே இது.

அதன் உட்புறத்தைப் பார்த்தால் குகை என்று கூட அதனை சொல்ல முடியாது. அதன் நீளமும் அகலமும் அவ்வளவு குறுகியதாக இருந்தது. மசபியேலை நோக்கி இருந்த அக்குகையானது பன்றிகள் தங்கக்கூடிய இடமாக திகழ்ந்தது.

அசுத்தமாகவும் ஊருக்கு வெளியே தனித்தும் இருந்த இந்த இடத்தில்தான், 1858 ஆம் ஆண்டு, பிப்ரவரி 11 ஆம் நாள், 14 வயதே நிரம்பிய பெர்னதெத் சூபிருஸ் என்னும் சிறுமி ஓர் அசாதரமான சந்திப்பை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

விறகு சேகரிப்பதற்காக தன் சகோதரியோடும், தோழியோடும் மசபியேல் மலைப் பகுதிக்குச் சென்றாள் பெர்னதெத். அப்பொழுது மசபியேல் குன்றுக்களுக்கிடையே காற்றின் இரைச்சலைப் போன்ற சத்தம் கேட்டது. சத்தம் வந்த திசையைப் நோக்கி பெர்னதெத் திரும்பிய போது, அங்கே அவளைப் போன்றே குள்ளமான, மிகவும் இளமையான தோற்றத்துடன், ஒளியால் சூழப்பட்ட ஒரு பெண்ணின் உருவத்தைக் கண்டாள்.

தான் கண்டதைக் குறித்து பெர்னதெத் இவ்வாறு கூறுகிறார்:

“வெள்ளை நிற உடையில் ஒரு பெண்ணை நான் கண்டேன். தனது இடையில் நீல நிற கச்சைக் கட்டியிருந்தார். தனது இரு பாதங்களிலும் இரு மஞ்சள் நிற ரோஜாப் பூக்களை அணிந்திருந்தார். அதே நிறத்தில்தான் அவள் கைகளிலிருந்த செபமாலை மணிகளும் இருந்தன. என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை. காண்பது எல்லாம் வெறுமனே பிரம்மை என்று எண்ணிக் கண்களைக் கசக்கினேன். என் சட்டைப் பையிலிருந்த செபமாலையைக் கையிலெடுத்து நெற்றியில் சிலுவை அடையாளம் வரைய முயன்றேன். ஆனால் நெற்றிவரை என் கையை என்னால் உயர்த்த முடியவில்லை. அது கீழே விழுந்தது. அக்காட்சியில் தோன்றிய பெண் சிலுவை அடையாளம் வரைந்தார். என் கைகள் நடுங்கின. மீண்டும் சிலுவை அடையாளம் வரைய முயற்சித்தேன். இந்த முறை கையை உயர்த்த முடிந்தது. நான் செபமாலை மணிகளை என் விரல்களுக்கிடையில்

கடத்தினேன். அப்பெண்ணும் செபமாலை மணிகளை அவர் விரல்களுக்கிடையே கடத்தினார். ஆனால் அவரின் உதடுகள் அசையவில்லை. நான் செபமாலையை முடித்தவுடன் அக்காட்சியும் திடீரென மறைந்து போனது.''

ஒட்டு மொத்தமாக 18 முறை நமது அன்னை பெர்னதெத்துக்கு காட்சியளித்திருக்கிறார். அக்காட்சிகளைக் குறித்து பின்னாளில் பெர்னதெத் இவ்வாறு கூறுகிறார்:

''ஒருவருக்கொருவர் நேருக்கு நேராகப் பேசுவது போல் அவர் என்னோடு பேசினார்.''

சகோதர சகோதரிகளோடு உண்மையிலேயே ஓர் அன்பான குடும்பத்தில் பெர்னதெத் பிறந்தார். ஐஸ்டின் கேஸ்ட்ரோ என்பவர் மாவு அரைக்கும் ஓர் ஆலை வைத்திருந்தார். அவரது இறப்பிற்குப் பிறகு விதவையான அவரது மனைவி கிளே அந்த ஆலையைத் தொடர்ந்து நடத்துவதற்காக தனது மூத்த மகளை அதே தொழிலைச் செய்யும் பிரான்சிஸ் சுபிருஸ் என்பவருக்கு திருமணம் செய்து வைக்க விரும்பினார். அவரோ இளைய மகளான லூயிஸை விரும்பினார். 1843 ஆம் ஆண்டு, ஜனவரி 9ம் நாள் பிரான்சிஸ் சுபிருஸ் மற்றும் லூயிஸ் தம்பதியினரின் திருமணம் நடைபெற்றது. அந்த புதுத் தம்பதியினர் பெர்னதெத்தின் பெற்றோர் வாழ்ந்து வந்த லூர்து நகரிலிருந்த மாவு அரைக்கும் ஆலையிலேயே, அதாவது **''பாலி மில்லில்''** குடியேறினர்.

இங்குதான் 1844 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 7 ஆம் தேதி இளம் தம்பதியினரின் தலைமகளாகப் பெர்னதெத் பிறந்தார். தாய் லூயிஸ் தீ விபத்தில் காயமடைந்ததால், பெர்னதெத்துக்குத் தாய்ப்பால் ஊட்ட முடியவில்லை. எனவே, பார்த்ரஸ் (Bartres) என்னுமிடத்தில் வாழ்ந்த மரிய லாகூஸ் என்ற வளர்ப்புத் தாயின் பராமரிப்பில் பெர்னதெத் சுபிருஸ் வளர்ந்து வந்தாள்.

பாலி மில்லில் இச்சிறு குடும்பத்தின் அன்றாட வாழ்க்கை முதல் 10 ஆண்டுகள் சந்தோஷமாகக் கடந்து சென்றது. ஆனால் அதன் பின்னர் பல்வேறு பிரச்சனைகள் தலைதூக்க ஆரம்பித்தன. பெர்னதெத்தின் தந்தை பிரான்ஸின் எதிர்பாரா விதமாக திடீரென ஒரு கண்ணை இழக்க நேரிட்டது. இந்த விபத்தின் காரணமாக அவர் தனது தொழிலை செய்ய முடியாமல் முடங்கிக் கிடக்கும் நிலை ஏற்பட்டது. அத்தோடு, பல்வேறு அரவைத் தொழிற்சாலைகள் அப்பகுதியில் வளர்ச்சியடையத் தொடங்கின. இதனால் பிரான்சிஸ் நடத்தி வந்த சிறிய அரவை ஆலையால் பெரிதாக இலாபம் ஈட்ட முடியவில்லை. தொழில் முற்றிலுமாக முடங்கிய நிலையில், வாடகை கூட கொடுக்க முடியாத சூழலில், 1854 ஆம் ஆண்டு ஜீன் மாதம் சுபிருஸ் குடும்பம் பாலி மில்லிலிருந்து வெளியேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வந்த 3 வருடங்களும் மிகப் பயங்கரமான காலகட்டமாக இக்குடும்பத்திற்கு அமைந்தன.

காலரா என்ற தொற்று நோய் பரவிய காலம் அது. அந்நோய் பெர்னதெத்தையும் தொற்றிக் கொண்டது. இத்தொற்று நோயிலிருந்து பெர்னதெத் மீண்டு வந்தாலும், அதனால் உண்டான ஆஸ்துமா நோயினால் வாழ்நாள் முழுவதும் பெர்னதெத் அவதிப்பட வேண்டியிருந்தது.

அடுத்து, இரண்டு வறட்சியான பருவங்கள். இதனால் இதற்கு முன்னர் என்றுமே பார்த்திராத கொடூரமான பஞ்சம் மக்களை வாட்டி வதைத்தது.

இவ்வேளையில் பெர்னதெத்தின் தந்தை பிரான்சிஸ் மாவு திருடினார் என்று குற்றம் சுமத்தப்பட்டு, சில நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.

இவைகளெல்லாம் சேர்ந்து பெர்னதெத்தின் குடும்பத்தை இன்னும் அதிகமான துயரத்துக்கு உள்ளாக்கின.

எனவே குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத சூழல் உருவானது. இதனால் ஒரு காலத்தில் மாவு அரைக்கும் ஆலையின் உரிமையாளராக இருந்த பெர்னதெத்தின் தந்தை பிரான்சிஸ் தற்பொழுது கூலித் தொழிலாளியாக மாற வேண்டிய அவலம் ஏற்பட்டது. தாய் லூயிஸ் துணி துவைக்கும் வேலையில் ஈடுபட்டார்.

அவர்களது வறுமையின் துயரம் எந்த அளவு இருந்தது என்றால், 1857 ஆம் ஆண்டு நகராட்சியால் கைவிடப்பட்டோர்களுக்காக நடத்தப்பட்ட கஷோ என்னும் சிறைச் சாலையில் ஒரு அறையில் வாழ வேண்டிய துர்பாக்கியமான நிலைக்கு பெர்னதெத் குடும்பம் தள்ளப்பட்டது.

13 வயது நிரம்பிய போதிலும், சிறுமி பெர்னதெத் எழுதவும் வாசிக்கவும் தெரியாதவளாய் இருந்தாள். பத்துவா (Patois) என்னும் பேச்சு வழக்கு மொழியையே அவள் பேசினாள். குடும்பச் சுமையைத் தாங்குவதற்காக, பார்த்ரெஸ் என்னும் ஊரிலிருந்த அவளது வளர்ப்புத் தாயிடம் பெர்னதெத் மீண்டும் அனுப்பப்பட்டாள். ஆனால் இப்பொழுது வளர்ப்பு மகளாக அல்ல, ஒரு வேலைக்காரியாக அவள் அனுப்பப்பட்டாள். அவ்வூரின் நுழைவாயில் அருகே அமைந்திருந்த ஆட்டுப்பட்டியில் இருந்த ஆடுகளைக் கவனித்துக் கொள்ளும் வேலை அவளுக்கு வழங்கப்பட்டது.

1858 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 18 ஆம் திகதி, வியாழக்கிழமை. அன்னையின் மூன்றாவது காட்சி அருளப்பட்டது.

குகையில் காட்சிக் கொடுத்த அப்பெண் அன்று முதல் முறையாகப் பேசினார். பெர்னதெத் அப்பெண்ணிடம் ஒரு பேனாவையும் ஒரு காகிதத் துண்டையும் கொடுத்து, அப்பெண்ணின் பெயரையும், அவர் என்ன விரும்புகிறார் என்பதையும் எழுதித் தரும்படிக் கேட்டாள்.

அப்பெண்ணோ எவ்வித தயக்கமுமின்றி, **“நான் உன்னிடம் சொல்ல விரும்புவதை எழுத வேண்டிய தேவையில்லை. தயவுசெய்து 15 நாட்கள் உன்னால் இங்கு வர முடியுமா? இவ்வுலகில் உன்னை மகிழச் செய்வேன் என்று நான் உனக்கு வாக்குறுதி தரமாட்டேன். ஆனால் மறு உலகில் நிச்சயம் உன்னை மகிழச் செய்வேன்”** என்று பதிலளித்தார்.

அன்பினால் அணி செய்யப்படும் இவ்வுலகை துன்பங்கள் வாயிலாகவே பெர்னதெத் அனுபவிக்க வேண்டியிருந்தது.

மார்ச் மாதம் 25ஆம் திகதிவரை, காட்சியில் தோன்றிய அப்பெண் தனது பெயரைச் சொல்லாததால், பெர்னதெத் தனது பேச்சு வழக்கில் அப்பெண்ணை “அக்குவேரோ” (Aquero) என்றே அழைத்தாள். அதற்கு “அந்தப் பொருள்” என்று அர்த்தம்.

பிப்ரவரி மாதம் 18ஆம் திகதி, தொடர்ந்து 15 நாட்கள் அக்குகைக்கு வரும்படி அப்பெண் பெர்னதெத்தைக் கேட்டுக் கொண்டார். பெர்னதெத்தும் அதற்கு “ஆம்” என்று பதிலளித்தாள். அனைத்திற்கும் மேலாக, பல்வேறு விதமான அச்சுறுத்தல்கள், தடைகள் இருந்தாலும், தான் அப்பெண்ணுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவதில் பெர்னதெத் பிரமாணிக்கமாக இருந்தாள்.

1858ஆம் ஆண்டு, பிப்ரவரி 24ஆம் திகதி, அப்பெண் பெர்ணடேத்திடம் ஒரு பரிந்துரையை முன் வைத்தார். அது உலகமாற்றத்துக்கான ஒரு பரிந்துரை. அதுதான் மனமாற்றம்.

பெர்னதெத் முழந்தாளிட்டிருந்த அப்பாறை பிரகாசமாக இருந்தது. முகமலர்ச்சியோடு இருந்த அப்பெண் திடீரென கவலையோடு காணப்பட்டார்.

புன்சிரிப்பின்றி, கவலை படிந்த முகத்தோடு காணப்பட்ட அந்தப் பெண், பெர்னதெத்தை நோக்கி,

**“தவம், தவம், தவம். தயவு செய்து பாவிகளுக்காச் செபிப்பாயா? பாவிகளுக்காகச் செய்யும் பரிகாரத்தின் அடையாளமாக இந்தத் தரையை உன்னால் முத்தமிட முடியுமா?”** என்று கேட்டார்.

லூர்து நகரில் இயேசுவும் அவரது தாயான மரியாவும் சிறப்பான விதத்தில் பிரசன்னமாகி இருப்பதை நம்மால் உணர முடியும். செபிப்பதற்கு ஏற்ற சூழல் லூர்து நகரில் நிலவுவதால், இங்கே நம்மால் மிக இயலபாகவும், எளிதாகவும் செபிக்க முடிகிறது. அதே வேளையில், அச்செபம் நமது தேவைகளைக் எடுத்துரைப்பதாக மட்டுமே இருக்கக் கூடாது. இங்கே நாம் பாவிகளுக்காக, தீமை செய்பவர்களுக்காக, துன்புறுத்துவோர்களுக்காக செபிக்க வேண்டுமென நம் அன்னை அழைப்பு விடுக்கிறார். நமது பாவ பழக்கங்களை உடைத்தெறியவும் நம் அன்னை நமக்கு உதவி செய்கிறார்.

1858 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25ஆம் திகதி வியாழக்கிழமை அன்னையின் ஒன்பதாம் காட்சி.

300 நபர்கள் குகை அருகே கூடியிருந்தார்கள்.

அன்று நடந்ததை பெர்னதெத் இவ்வாறு எடுத்துரைக்கிறார்:

“அருகில் இருந்த நீருற்றுக்குச் சென்று, அதிலிருந்த நீரை குடிக்கவும், அந்நீரால் என்னைக் கழுவவும் வேண்டுமென அப்பெண் என்னிடம் கூறினார். அந்நீரூற்றில் குறைந்தளவு நீரே இருந்தது. அத்தோடு அது சேறும் சகதியும் நிறைந்து அசுத்தமாய் இருந்தது. தண்ணீரை குடிக்க மூன்று முறை முயன்றேன். ஆனால் குடிக்க முடியவில்லை. நான்காம் முறைதான் என்னால் அந்நீரைக் குடிக்க முடிந்தது. பிறகு அந்நீரால் என் முகத்தைக் கழுவினேன். மேலும், என்னை அப்பெண் அங்கே வளர்ந்திருந்த புல்லையும் சாப்பிட வைத்தார். பின்னர் அக்காட்சி மறைந்தது. நானும் அவ்விடம் விட்டு அகன்றேன்.”

பெர்னதெத்தின் இச்செயல்களைப் பார்த்து, கூட்டத்திலிருந்து ஒருவர் அவளைப் பார்த்து,

“இப்படி நீ செய்வதைப் பார்க்கும் போது, உன்னைப் பைத்தியக்காரி என்றுதான் எங்களுக்கு எண்ணத் தோன்றுகிறது என்பது உனக்குத் தெரியுமா?” என்று கேட்டார்.

அதற்கு பெர்னதெத், “இது பாவிகளுக்காக” என்று பதிலளித்தார்.

தொடக்கத்தில் சேறு நிறைந்த சகதியாகக் காணப்பட்ட அந்நீருற்று, அதுமுதல் தெளிந்த சுத்தமான நீராக ஓடிக்கொண்டிருப்பதை அனைவரும் காண முடியும். தூய்மையான இந்த நீர் நமக்கு ஒன்றை நினைவூட்டுகிறது. நம்முடைய பாவநிலைக்குப் பின்னால், கடவுளின் அருளால் நமக்குத் தூய்மையான இதயம் பரிசாகத் தரப்படுகிறது என்பதே அச்செய்தி.

இத்தண்ணீர் எவ்விதமான சிறப்புக் குணங்களையோ பண்புகளையோ வெளிக்காட்டுவதில்லை. இது வெறுமனே ஒர் அடையாளம் மட்டுமே.

எவ்வாறு இத் தண்ணீரை நாம் கையாளவேண்டும் என்பதற்கான வழி முறையை பெர்னதெத் நமக்குச் சொல்லித் தருகிறார்:

**“இத்தண்ணீரை ஒரு மருந்தாக நீங்கள் கருத வேண்டும். விசுவாசத்தோடும் செபத்தோடும் நீங்கள் இதனைப் பருக வேண்டும். விசுவாசம் இல்லையென்றால், இத்தண்ணீருக்கு எந்த மதிப்பும் இல்லை.”**

இத்தண்ணீரின் ஆழமான பொருள் குறித்து, தண்ணீர்க் குழாய்களின் மேல் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

**“உங்களைக் கழுவுங்கள், இத்தண்ணீரைப் பருகுங்கள், அத்தோடு கடவுள் உங்கள் இதயங்களைத் தூய்மைப்படுத்த வேண்டுமெனச் செபியுங்கள்.”**

லூர்து நகருக்கு அருகாமையில் லூப்ரிஜேக் என்ற ஒரு கிராமம் இருந்தது. அக்கிராமத்தில் கேத்தரீன் என்னும் பெண் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரது கை வாத நோயால் பாதிக்கப்பட்டிருந்து. 1858ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் நாள் இரவு வேளையில் செபம் செய்வதற்காக அவர் குகைக்கு வந்த போது. அங்கு ஏற்கனவே ஏராளமான மக்கள் பெர்னதெத்தின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பதைக் கண்டார். கேத்தரீன் வாதத்தால் முடங்கிப் போன தனது கையை நீரூற்றில் உள்ள தண்ணீரில் அமிழ்த்தினார். அக்கையால் அனைத்து செயல்களையும் செய்யும் அளவுக்கு அவரது கை பூரணக் குணம் பெற்றது.

இந்த முதல் புதுமையைத் தொடரந்து, அன்று முதல் இன்றுவரை 6500 குணம் பெற்ற புதுமைகள் நடந்துள்ளதாக லூர்து நகரிலுள்ள மருத்துவப் பணியகத்தில் பதிவாகியுள்ளன. இவற்றில் 66 நிகழ்வுகள் மட்டுமே திருச்சபையால் அங்கிகரிக்கப்பட்டு புதுமைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

1858ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 14ஆம் காட்சியின் போது, அன்னை மரியா பெர்னதெத்திடம் ஒரு பணியை ஒப்படைத்தார்.

**“நீ குருவிடம் சென்று, மக்களைப் பவனியாக இவ்விடத்திற்கு அழைத்து வரவேண்டுமென்றும், இங்கு ஒரு சிற்றாலயம் கட்ட வேண்டும் என்றும் சொல்.”**

பெர்னதெத் தன் இரண்டு அத்தைகளைக் கூட்டிக் கொண்டு, அருள்தந்தை பெய்ரமால் (Payramale) இல்லம் சென்றாள்.

குரு: “நீ புனித கன்னி மரியாவைப் பார்த்ததாக எனக்குச் சொல்லப்பட்டதே!”

பெர்னதெத்: “அவர் கன்னி மரியாதான் என்று நான் ஒருபோதும் சொன்னதில்லை.”

குரு: “அப்படியானால் அவர் யார்?”

பெர்னதெத்: “எனக்குத் தெரியாது. ஆனால் மக்களைப் பவனியாக குகைக்கு அழைத்து வரும்படியாகக் குருவிடம் போய்ச் சொல் என்று அது என்னைக் கேட்டுக் கொண்டது.”

குரு: “பவனியா! அதை ஆயர்தான் முடிவு செய்ய வேண்டும். அப்பெண் ஏன் இந்த பவனியை விரும்புகிறாள்?”

பெர்னதெத்: “எனக்குத் தெரியாது.”

குரு: “உனக்கு எதுவும் தெரியாது என்றால், வீட்டிலேயே இரு. நீ இப்பொழுது வீட்டுக்குப் போ.”

அன்னையின் அடுத்தச் செய்தியை பெர்னதெத் அவரிடம் சொல்லும் முன்பே, குருவானவர் அவளைக் கோபத்துடன் தன் இல்லத்திலிருந்து வெளியே அனுப்பிவிட்டார்.

அருள்தந்தை பெய்ரமால் கோபத்தில் விரட்டியதால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து அவளது இரு அத்தைகளும் சற்று மீண்டு வருகையில், “ஐயோ! சிற்றாலயம் பற்றிச் சொல்ல மறந்துவிட்டேன். நான் உடனடியாக பங்குத் தந்தையின் இல்லத்திற்குத் திரும்பிச் செல்லவேண்டும்” என்று பெர்னதெத் தன் அத்தைகளிடம் கூறினாள். பெர்னதெத் திரும்பிச் சென்று பங்குத் தந்தையின் வீட்டுக் கதவை மீண்டும் தட்டிய பொழுது நேரம் மாலை 6 மணி.

பெர்னதெத்: “தந்தையே, அங்கே ஒரு சிற்றாலயம் கட்ட வேண்டும் என்றும் குருவிடம் சொல் என்றும் அக்குய்ரோ என்னிடம் சொன்னது.”

குருவானவரிடமிருந்து கோபத்தை எதிர்பார்த்த பெர்னதெத், “மிகச் சிறய ஆலயமாக இருந்தாலும் பரவாயில்லை” என்று மெதுவானக் குரலில் சொன்னாள்.

குரு: “உனக்கு இன்னும் அப்பெண்ணின் பெயர் தெரியாது, அப்படித்தானே?”

பெர்னதெத்: “தெரியாது, தந்தையே!”

குரு: “அப்படியென்றால், நீ அப்பெண்ணிடம் அவரது பெயரைக் கேட்க வேண்டும்.”

ஒவ்வொரு முறையும் அக்குய்ரோவின் விண்ணப்பத்தை நினைவூட்ட பெர்னதெத் குருவானவரிடம் செல்லும்போது, குருவானவர் ஒரே பதிலைத்தான் அவளிடம் சொன்னார்:

“சிற்றாலயம் கட்ட வேண்டுமென்றால், அப்பெண் தனது பெயரைச் சொல்ல வேண்டும், மேலும், அங்குள்ள ரோஜா செடிகளில் பூக்கள் மலர வேண்டும்.”

1866-லிருந்து 1872-வரையிலான காலக்கட்டத்தில், ஒரு சிற்றாலயமானது குகையின் மேலிருந்த பாறையின் மீது கட்டப்பட்டது. பின்னர் திருத்தந்தை 9ஆம் பத்திநாதரால் இது மைனர் பசிலிக்காவாக அறிவிக்கப்பட்டு அமல உற்பவ அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

1858ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 4ஆம் நாள் பதினைந்தாம் காட்சியின் கடைசி நாள். இருப்பினும் 1858ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 25ஆம் திகதி, வியாழக்கிழமை, முன்பு இருந்தது போல பெர்னதெத் தன் உள்ளத்தில் ஒர் அழைப்பினை உணர்ந்தாள். அன்னையின் 16ஆம் காட்சியைக் குறித்தும் அவர் சாட்சியம் பகர வேண்டும் என்பதே அவ்வழைப்பு.

எதையோ திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே, திறந்திருந்த வாயில்களின் வழியாக தனது இல்லத்திற்குள் பெர்னதெத் நுழைவதை அருள்தந்தை பெய்ரமால் கண்டார்.

பெர்னதெத்: **'Que soy era Immaculada Conception"**

குரு: “நீ என்ன சொல்கிறாய்?”

பெர்னதெத்: “நாமே அமலோற்பவம் என்று அக்குய்ரோ சொன்னது.”

குரு: “நீ தவறாகப் புரிந்திருக்க வேண்டும். நீ சொல்வதன் பொருள் உனக்குத் தெரியுமா?”

பெர்னதெத்: “தெரியாது தந்தையே!”

குரு: “உனக்குப் புரியாத ஒன்றை உன்னால் எப்படிச் சொல்ல முடியும்?”

பெர்னதெத்: “இங்கு வரும்வரை வழி முழுவதும் அப்பெயரைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே வந்தேன். நீங்கள் சிற்றாலயத்தை கட்ட வேண்டும் என இன்னும் அப்பெண் விரும்புகிறார்.”

பெர்னதெத்தின் பதிலைக் கேட்ட குருவானவர் சற்றே திகைத்துப் போனார். அப்பெண்ணின் பெயரைப் பற்றிய எவ்வித விளக்கத்தையும் கூறாமல் பெர்னதெத்தை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்.

நெவரின் அன்பின் பணியாளர்கள் என்னும் துறவற சபையைச் சேர்ந்த அருள்சகோதரிகள் லூர்து நகரில் ஏற்கனவே பணிசெய்து கொண்டிருந்தனர். இறக்கும் தருவாயில் இருப்பவர்களைப் பராமரிப்பதற்காக புனித ராக், அதாவது புனித ஆரோக்கிய நாதர் மருத்துவமனையை அவர்கள் நடத்தி

வந்தனர். இன்று அம்மருத்துவமனை லூர்து நகரின் பொது மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இந்த அருள்சகோதரிகள் முதியவர்களையும், நோயாளிகளையும் பராமரித்து வந்ததோடு, அங்குள்ள பள்ளியில் இளம்பெண்களுக்கு கற்பித்தும் வந்தனர்.

1858ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் பார்த்ரெஸ் நகரிலிருந்து திரும்பி வந்ததும், பெர்னதெத் இப்பள்ளியில் சேர்ந்தாள்.

காட்சிகள் கண்ட பின்பு, பத்திரிகையாளர்களிடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் தன்னைக் காத்துக் கொள்வதற்காக லூர்து நகரை விட்டு வெளியேறும்வரை, விடுதியில்தான் அவள் தங்கியிருந்தாள்.

இங்குதான் பெர்னதெத் வாசிக்கவும் எழுதவும் கற்றுக் கொண்டாள்.

இங்குதான் 1858ஆம் ஆண்டு, ஜீன் மாதம் 3ஆம் திகதி, முதல் முறையாக நற்கருணையையும் பெற்றுக் கொண்டாள்.

இங்குதான் நோயாளிகளை அன்பு செய்யவும், பராமரிக்கவும் கற்றுக் கொண்டாள். தனது துறவற வாழ்வுக்கான ஆசையையும் வளர்த்துக் கொண்டாள்.

இறுதியாக, இங்குதான் அருள்சகோரிகளுக்கான நெவரின் அன்பின் பணியாளர்கள் சபையில் சேரவும் முடிவெடுத்தாள்.

1866ஆம் ஆண்டு, ஜுலை மாதம் 3ஆம் திகதி, நெவரில் அமைந்துள்ள புனித கில்டார்ட் (St. Gildard) கன்னியர் இல்லத்திற்கு புறப்படுமுன், கடைசியாக குகையைப் பார்க்கச் சென்றாள்.

அன்றைய மாலைப் பொழுது முழுவதையும் தனது குடும்பத்தாரோடு செலவிட்டாள்.

பெர்னதெத்தின் வாழ்க்கையை வெறுமனே அன்னை மரியாவின் காட்சிகளோடு சுருக்கிக் கொள்ளும் அபாயம் உள்ளது. உண்மையில் அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அவரது திருக்காட்சி அனுபவத்தை நாம் கடந்து இன்னும் முன்னேறிச் செல்ல வேண்டும். நாம் நெவர் அனுபவத்திற்குச் செல்ல வேண்டும். இங்குதான் தன் வாழ்வின் கடைசி 13 வருடங்களை ஓர் அருள்சகோதரியாக பெர்னதெத் செலவழித்தார்.

1879ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி, பெர்னதெத் இறைவனடிச் சேர்ந்தார். அவரது உடலானது நெவர் அருள்சகோதரிகளின் இல்லத்தில் அமைந்திருந்த தோட்டத்திலேயே நல்லடக்கம் செய்யப்பட்டது. 30 வருடங்கள் கழித்து, அவருக்கு முக்தி பேறு பட்டம் கொடுப்பதற்காக, கல்லறையைத் தோண்டி, அவரது உடலை எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அப்பொழுது கல்லறையில் கூடியிருந்த அனைவரும் வியக்கும் வண்ணம், அவரது உடல் அழியாமல், எவ்வித மாற்றமும் இல்லாமல் அப்படியே இருந்தது.

காலத்தாலும் மாற்ற முடியாத பசுமை மாறா அவரது முன்மாதிரியான வாழ்வின் பொருட்டு, 1933ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 8ஆம் திகதி, திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் பெர்னதெத்தை புனிதராக அறிவித்தார்.

சிறந்த முறையில் மீள்பாதுகாப்பு செய்யப்பட்ட பெர்னதெத்தின் திருவுடல், இன்று அனைவரும் கண்டு மரியாதை செய்யும் விதத்தில், நெவர் நகரில் உள்ள அருள்சகோதரிகள் இல்லத்திலுள்ள சிற்றாலயத்தில், அழகிய கண்ணாடிப் பேழைக்குள் வைக்கப்பட்டுள்ளது.

உடலிலும் உள்ளத்தில் நோயுற்றவர்களை லூர்து நகர் அன்போடு வரவேற்கிறது என்பது அனைவரும் அறிந்ததே. காரணம், நோயுற்றவர்கள்தான் லூர்து நகரின் முக்கிய பிரமுகர்கள். உலகின் பல்வேறு

திசைகளிலிருந்தும் வருடத்திற்கு ஏறக்குறைய 80000 நோயாளிகள் லூர்து நகருக்கு வந்து, அற்புதக் கெபியைச் சந்தித்து, புனித பெர்னதெத் மற்றும் அன்னை மரியாவின் பரிந்துரையால் மனதிலும் உடலிலும் வலிமை பெற்றுச் செல்கின்றனர்.

இங்கே நோயாளிகள் தங்கும் கட்டிடங்கள் மருத்துவமனைகள் போன்றோ விடுதிகள் போன்றோ இருப்பதில்லை. அன்புநிறை சேவையும் செபமும் நிறைந்த சூழலில், ஒரு குடும்பத்தில் தங்குவது போன்ற உணர்வை நோயாளிகள் இங்கே பெறுகின்றனர்.

நோயாளிகள் மட்டுமின்றி, இளைஞர்களும் இளம் பெண்களும் லூர்து நகரைப் பெரிதும் விரும்புகின்றனர். அன்னையின் திருத்தலத்தைச் சந்திக்க வரும் இளைஞர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டே சென்றாலும், பெர்னதெத் மற்றும் அன்னை மரியாவைப் போன்று இரு இளம் உள்ளங்களை காண்பது அரிதே!

முதல்முறைக் காட்சிக் கொடுத்த பொழுது. நம் அன்னை எதுவும் பேசவில்லை. முன்சிரிப்போடு செபம் மட்டுமே செய்தார். இதே செப உணர்வும் முக மலர்ச்சியும் லூர்து நகர் முழுவதும் பரவிக் கிடக்கிறது.

பெர்னதெத் வாழ்ந்த காலம் நேரிடையான, எளிமையான காலம். அவர் அமைதியை விரும்பினார். அமைதியானது தியானத்திற்கு இட்டுச் செல்வதோடு, கடவுளையும் கண்டுணரச் செய்கிறது.

அன்னை காட்சிக் கொடுத்த காலக்கட்டத்தில், பரலோக மந்திரம், அருள்நிறைந்த மரியே, விசுவாசப்பிரமாணம் போன்ற ஒருசில அடிப்படையான செபங்களை மட்டுமே சிறுமி பெர்னதெத் அறிந்து வைத்திருந்தாள். எல்லாவற்றிற்கும் மேலாக, சிலுவை அடையாளம் வரைதல் போன்ற எளிய விசுவாச செய்கைகளையே அவள் அதிகம் விரும்பினாள்.

கெபியின் அருகில், இரவும் பகலும், வருடம் முழுவதும் திருப்பயணிகள் காணிக்கையாக அர்ப்பணித்த இலட்சக்கணக்கான மெழுகுவர்த்திகள் அவர்களது செபத்தின் வெளிப்பாடாக் ஒளியேற்றப்படுகின்றன.

கெபி அமைந்துள்ள பாறையின் மீது ஒரு சிறிய குடில் கட்டப்பட்டுள்ளது. 1866ஆம் ஆண்டு, மே மாதம் பெர்னதெத் முன்னிலையில் இது திறக்கப்பட்டது. அவரின் அழியா நினைவுச் சின்னமாக திகழும் இச்சிற்றாலயம் தற்பொழுது தனித்திருந்து செபிப்பதற்கான இடமாக திகழ்கின்றது.

**நற்கருணை ஆராதனை**

திவ்விய நற்கருணையானது திறந்த வெளியில் அமைந்துள்ள ஒரு கூடாரத்தில் தினமும் எழுந்தேற்றம் செய்யப்படுகிறது. இச் சிற்றாலயம் உண்மையில் ஒரு ஆராதனைக் கூடாரமாக திகழ்கின்றது. வசீகரம் செய்யப்பட்ட பெரிய வெண்மை நிற அப்பத்தில் ஆண்டவரின் உண்மையான, உயிருள்ள பிரசன்னம் இருக்கிறது என்று விசுவசிப்பவர்களுக்கு மட்டுமே ஒருவரால் நற்கருணை ஆராதனையில் ஈடுபட முடியும். ஆராதனை என்பது புகழ்ச்சியும் நன்றியும் கலந்த செபமாகும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், எல்லா மக்களுக்குமான ஆண்டவரின் நன்மைத்தனத்தை உணர்ந்து, கடவுளுக்கு நன்றி சொல்வதே ஆராதனை ஆகும். நற்கருணையில் இறைவன் பிரசன்னமாயிருக்கிறார், அவர் நமக்குச் செவிசாய்க்கிறார், நம்மோடு பேசுகிறார்.

## சிலுவைப் பாதை

லூர்தன்னை திருத்தலத்தின் சிலுவைப் பாதைச் சுருபங்களை அஸ்பலேகஸ் குன்றுகளுக்கிடையே பார்க்கலாம். சிலுவைப்பாதையின் 14 ஸ்தலங்களிலும் நிறுவப்பட்டுள்ள 115 வெண்கலச் சுருபங்கள், இயேசுவின் திருப்பாடுகளைச் பிரதிபலிக்கின்றன. பாவ மன்னிப்பிற்கான ஒறுத்தல் மற்றும் பரிகார உணர்வோடு இங்கே சிலுவைப் பாதை செபங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. கடவுள் பழிவாங்குபவரல்லர். மாறாக, இரக்கம் நிறைந்தவர். இரக்கம் நிறைந்த அவரைப் பின்பற்றி, நாம் ஒருவர் மற்றவரைத் தொட்டு, "நீ இருப்பது போலவே உன்னை ஏற்றுக் கொள்கிறேன்" என்று சொல்ல வேண்டும்.

## ஒப்புரவு அருள்சாதனம்

லூர்து நகருக்கு அன்னையைத் தேடி வரும் பக்தர்கள் ஒப்புரவு அருள்சாதனத்தில் பங்கு பெற வேண்டும் என்று அதிகமாகப் பரிந்துரை செய்யப்படுகிறது. மார்ச் மாதம் முதல் நவம்பர் மாதம் வரை இத்திருவருள்சாதனத்தை நிறைவேற்றுவதற்காக உலகின் பல்வேறு திசைகளிலிருந்தும் குருக்கள் லூர்து நகருக்கு வருகை தருகிறார்கள்

## தண்ணீர்த் தொட்டி

ஆண்டுதோறும் ஏறக்குறைய 4 இலட்சம் திருப்பயணிகள் இங்குள்ள தொட்டியிலுள்ள நீரில் மூழ்கி எழுகிறார்கள். "தண்ணீரில் கழுவு" என்ற நம் அன்னையின் அழைப்பு, இவ்வாறு மூழ்கி எழுவதன் மூலம் நிறைவேற்றப்படுகிறது.

## சர்வதேச திருப்பலி

ஒவ்வொரு புதன்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் அனைத்துத் திருப்பயணிகளும் பங்கெடுக்கும் விதமாக சர்வதேச திருப்பலி நடைபெறுகிறது. திருச்சபை அனைவருக்குமானது, எல்லோரையும் உள்ளடக்கியது என்பதை எடுத்துரைப்பதே இக்கொண்டாடத்தின் நோக்கம் ஆகும். இத்திருப்பலியானது பொதுவாக நிலத்தடியில் அமைந்துள்ள திருத்தந்தை பத்தாம் பத்திநாதர் பேராலயத்தில் வைத்து கொண்டாடப்படுகிறது.

## புனித பெர்னதெத் ஆலயம்

1988ஆம் ஆண்டு குகையின் வலப்புறமாக நீரோடையின் மறுபுறத் தில் கட்டப்பட்டுள்ள புனித பெர்னதெத்தின் ஆலயத்தில்தான் பெரும்பாலான திருப்பயணிகளின் தொடக்க நிகழ்வுகள் ஆரம்பிக்கின்றன. லூர்து நகரில்தான் பெர்னதெத் இறுதியாக 18ஆம் முறை நம் அன்னையைத் தரிசித்தார். இந்த ஆலயத்தில் 300 நோயாளிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள படுக்கைகளையும் இருக்கைகளையும் சேர்த்து ஏறக்குறைய 5000 திருப்பயணிகள் அமரலாம்.

## நற்கருணைப் பவனி

லூர்து நகரைப் பொறுத்தவரையில் நற்கருணைப்பவனி ஒரு தினசரி நிகழ்வாகும். தினமும் மாலை 5 மணிக்கு நடைபெறும் நற்கருணைப் பவனி லூர்து நகரில் நடைபெறும் முக்கிய கொண்டாட்டங்களில் ஒன்றாகும். இது நோயாளிகளுக்கான சிறப்புப் பவனியாகும். இப்பவனி கெபியின் திறந்த பகுதியிலிருந்து தொடங்குகிறது. ஆயர் அல்லது குருவானவரே நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டுள்ள கதிர்பாத்திரத்தை ஏந்தி வருவார். இப்பவனியானது, மகுடம் தரித்த அன்னையின் பார்வையில், செபமாலை சதுக்கம் வழியாகச் சென்று, நிலத்தடியில் அமைந்துள்ள திருத்தந்தை பத்தாம் பத்திநாதர் பேராலயத்தில் நிறைவடைகிறது. இக்கொண்டாட்டத்தின் இறுதியில் நோயாளிகளுக்கும் கூடியிருக்கும் அனைவருக்கும் நற்கருணை ஆசீர் வழங்கப்படுகிறது.

## மெழுகுவர்த்திப் பவனி

மார்ச் மாதம் இறுதியிலிருந்து அக்டோபர் மாதம் இறுதிவரை, தினமும் இரவு 9 மணிக்கு அன்னையின் திருவுருவப் பவனி நடைபெறுகிறது. எரியும் மெழுகுவர்த்திகளோடு பல்லாயிரக்கணக்கான திருப்பயணிகள் இப்பவனியில் பங்கு பெறுகின்றனர். திருப்பயணிகளின் முக்கியமான செப நேரம் இது. செபமாலையே இப்பவனியின் மையச் செபம் ஆகும். மக்களைப் பவனியான இவ்விடத்திற்கு அழைத்து வரவேண்டும் என்று அன்னை விடுத்த அழைப்புக்கு பக்தர்கள் தரும் பதிலாக இந்த மெழுகுவர்திப்பவனி அமைந்துள்ளது